விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 026 வள்ளுவர் ஆண்டு 2056 தை 01 செவ்வாய்க்கிழமை (14.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே




## இலாபம் ஈட்டும் தொழிலாக மருத்துவத் துறை மாற்றம்

### சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)


இலாபம் ஈட்டும் தொழிலாக மருத்துவத் துறை மாற்றம் பெற்றுள்ளதாக சுகாதார அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரச மருந்துக் கூட்டுத்தாபனத்துக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மருத்துவத் துறையிலுள்ள பிரச்சினைகள் மற்றும் குறைபாடுகளைத் 15

## சீனா பயணமானார் அநுர



15

## எரிபொருள் வரியை திருத்தாதிருக்க அரசு தீர்மானம்

(கொழும்பு)

எரிபொருளுக்கான தற்போதைய வரியை மீளாய்வு செய்வதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி ஜனாதிபதி அநுர குமார 15

## இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு

# தமிழ்த் தலைவர்கள் ஓரணியில் இணைக



### அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயத்தில் தமிழ்த் தலைவர்கள் ஓரணியில் இணைய வேண்டும் என அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ரயில் மோதியதில் இளைஞன் உயிரிழப்பு

### புத்தூர் அருகே சம்பவம்

(யாழ்ப்பாணம்)

புகையிரதம் மோதியதில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புத்தூர்ச் சந்தியை அண்மித்து நேற்றுத் திங் கட்கிழமை மதியம் இச்சம்பவம் இடம்பெற 15

## அநுர அரசு ஏற்படுத்த முயலும் மாற்றத்துக்கு உதவத் தயார்

### இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர்

(கொழும்பு)

புதிதாகப் பதவி ஏற்றுள்ள அநுர அரசாங்கம் ஏற்படுத்த முயலும் மாற்றத்துக்கு உதவத் தயார் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

விருது வழங்கும் நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதாகக் கூறி ஆட்சிப்பீடமேறியதோ, அம்மாற் 15

## முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் வீட்டுக் கிணற்றிலிருந்து இளைஞன் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சுதந்திரபுரத்தில் வீட்டுக் கிணற்றிலிருந்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த பிலிப் குமார் டினோஜன் (வயது-28) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

முல்லைத்தீவு புதுக்குடியி 15



## பருத்தித்துறையில் நீண்ட நாட்களாக இயங்கி வந்த

### சட்டவிரோத மூன்று மதுசார நிலையங்கள் முற்றுகை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பகுதியில் நீண்ட காலமாக சட்டவிரோதமாக இயங்கி வந்த மதுசார விற்பனை நிலையங்கள் மூன்று நேற்றுத் திங்கட்கிழமை பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

மாகாண உதவி மதுவரி ஆணையாளர் எஸ்.ரஞ்சனின் ஆலோசனைக்கு அமைவாக, யாழ்.மாவட்ட மதுவரி அத்தியட்சகர் ரணவீரவின் அறிவுறுத்தலில், பருத்தித்துறை மதுவரித் 15

## மாகாண மட்டத்தில் குற்றவியல் விசாரணைப் பிரிவு நிறுவப்படும்

### அமைச்சர் ஆனந்த விஜேபால

(கொழும்பு)

மாகாண மட்டத்திலான குற்றவியல் விசாரணைப் பிரிவுகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் தற்போதுள்ள 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 வயது சிறுமி துஷ்பிரயோகம்

# முல்லைத்தீவில் இரு பெண்கள் உட்பட மூவர் கைது

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்புப் பகுதியில் சிறுமி ஒருவரை வைத்துப் பாலியல் தொழில் நடாத்தி வந்த குற்றச்சாட்டில் குடும்பப் பெண் ஒருவரும், அவரது கணவரும் கைது செய்யப்பட்டனர்.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில், கிளிநொச்சியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி ஒருவரை மூன்று மாதங்களாக வீட்டில் வைத்து குறித்த இருவரும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தியுள்ளனர்.

குறித்த சிறுமி இவ் வீட்டை விட்டு வெளியேறி கிளிநொச்சியில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுள்ளார்.

குறித்த சிறுமியின் உடலில் ஏற்பட்ட மாற்றத்தை அவதானித்த பெற்றோர், கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்த பின்னர் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியிருந்தமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து, கிளிநொச்சி வைத்தியசாலைப் பொலிஸார், பாதிக்கப்பட்ட சிறுமியிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் உண்மை வெளியாகியுள்ளது.

குறித்த சிறுமிக்கும் கிளிநொச்சியில் ஒரு பெண்ணுக்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளது.

பின்னர் அந்தப் பெண், புதுக்குடியிருப்பு பெண்ணுக்கும் சிறுமிக்கும் தொடர்பை ஏற்படுத்தி சிறுமிக்குப் பண ஆசையினைக் காட்டிப் புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் உள்ள வீட்டிற்கு சிறுமி அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, கிளிநொச்சிப் பொலிஸாரினால் கிளிநொச்சியில் ஒரு பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்புப் பொலிஸிற்கு தகவல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து புதுக்குடியிருப்பு குடும்பப் பெண்ணும் கணவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி பொலிஸார் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)



தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று இடம்பெற்ற எதிர்ப்புப் போராட்டம். (ம-7)



நல்லைக்கந்தன் தண்ணீர்ப்பந்தல் உதவும் கரங்கள் அமைப்பினால் தைப்பொங்கலை முன்னிட்டு பொருளாதார நலிவுற்ற 200 குடும்பங்களிற்கு பொங்கற்பானைகளும் பொங்கற்பொருட்களும் வழங்கப்பட்டது. (ம-7)

# உள்ளூராட்சித் தேர்தல் முன்னே மாகாண சபைத் தேர்தல் பின்னே

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் உறுதியான தீர்மானத்தை விரைவாக எடுக்குமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சட்ட சிக்கலுக்குத் தீர்வு கண்டால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்தலாம் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம். ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ளது. சட்ட மூலத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்த கால வகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஒருவேளை சட்டமூலம் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தப்பட்டால் நீதிமன்றத்தின் வியாக்கியானம் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டும்.


நீதிமன்றத்தின் வியாக்கியானத்துக்கு அமைய சட்டமூலம் வெகு விரைவாக நிறைவேற்றப்பட்டால் புதிய திருத்தத்துக்கு அமைய தேர்தலுக்கான பணிகளை முன்னெடுத்து வேட்பு மனுத்தாக்கலைக் கோருவோம்.

ஏப்ரல் மாதமளவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே அடுத்தகட்டப் பணிகளுக்குத் திகதி தீர்மானிக்க முடியும். ஆகவே சட்டமூல உருவாக்கத்தை விரைவுபடுத்துமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். விரைவாகத் தேர்தலை நடத்துவதற்கான இயலுமை காணப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு தீர்வு காணுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். அத்துடன் தேர்தல் முறைமை தொடர்பில் தெரிவுக்குழுக்களிடம் எமது யோசனைகளை முன்வைத்துள்ளோம். காணப்படும் சட்ட சிக்கலுக்குத் தீர்வு கண்டால் உள்ளூராட்சிமன்றத் தேர்தலைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என்றார். (ம-7)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 1944 - 11 - 19 |  | 2025 - 01 - 13 |

### இராசு தங்கப்பிரகாசம்

(ஓய்வுநிலை கல்வித்திணைக்கள கட்டட மேற்பார்வை அதிகாரி)

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மடத் தடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசு தங்கப்பிரகாசம் (ஓய்வுநிலை கல்வித்திணைக்கள கட்டட மேற்பார்வை அதிகாரி) அவர்கள் நேற்று (13.01.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் வசந்தாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மகாதேவன், வாமதேவன் மற்றும் மனோன்மணி, வசந்தராணி, லோகநாயகி, சகாதேவன், வரதன், அரியமலர், கோடீஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், அற்புதலிங்கம் மற்றும் சந்திரலிங்கம், செல்வலிங்கம், வதனா, ஜெயலலிதா ஆகியோரின் மைத்துனரும் முகுந்தன், நிசாந்தன், ஜெயந்தன், அஜந்தன், கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மீனா, நளினி, கேமா, துர்க்கா, ரூபினி ஆகியோரின் மாமனாரும் மனோஜ், ஹரிஸ், சஹீரா, றித்விக், கர்ணிகா, வர்னுஜா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.01.2025) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மடத்தடி 076 538 2691 (3026) குடும்பத்தினர்

செம்மொழி
கல்வியகம் - தாவடி
(குழு வகுப்பு)
தமிழ் மொழியும் இலக்கியமும்
கல்வியாண்டு 2025
தரம் 6 முதல் O/L வரை
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
ஆ.பிருந்தாபன்
077 255 0807
பாடசாலைக்கு அருகில்

லங்கா மஹறால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (543)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
Western Union MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி, நல்லிணக்கம் பேண ஒன்றிணைவோம்



## பொங்கல் வாழ்த்தில் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

**இலங்கை மக்களின் நற்பண்புகள், நல்லிணக்கம் மற்றும் சுகவாழ்வு என்பவற்றை மேம்படுத்தி சமூக மாற்றத்திற்கான ஆரம்ப முயற்சியாகவும், சுற்றுச்சூழல் மற்றும் நெறி முறைக்கான புதிய ஒரு திசையின் தொடக்கமாக "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டம் ஆரம்பிக்கப் பட்டுள்ள சமயத்தில், தைப்பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுவது மகிழ்ச்சியளிக்கிறது என பொங்கல் வாழ்த்துச்செய்தியில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**




"அறுவடைத்திருநாள்" என்று பொருள் படும் தைப்பொங்கல் உலகம் முழுவதும் உள்ள தமிழர்கள் மற்றும் இந்துக்களால் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகிறது. நிறைவான அறுவடைக்கு பங்களித்த சூரியன், பூமி, மழை மற்றும் பசுக்கள், உபகரணங்களுக்கு நன்றி செலுத்துவது இந்த நாளின் சிறப்பம்சமாகும். இந்த விழா 'தை'மாதத்தின் முதல் நாளில் கொண்டாடப்படுகிறது. சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் "உத்தராயணம்", தைப்பொங்கல் நாளில் தொடங்குகிறது. புதிய திசையை நோக்கிச் செல்லல், மனித சமூகத்தின் உள்ளக-வெளிப்புற சுகவாழ்வு என்பனவே தைப்பொங்கல் பண்டிகையின் அர்த்தமாகும்.

வரலாற்று ரீதியாக வேரூன்றிய ஆசிய மரபுகளில் மனிதனுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையிலான பிணைப்பு பிரிக்க முடியாதது. தைப்பொங்கல் தினத்தால் வெளிப்படுத்தப்படும் அந்த மரபுகள் இந்த திட்டத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.

அதேபோல் தைப்பொங்கல் கொண்டாட்டம் மக்களின் கலாசார வாழ்வில் புதிய நம்பிக்கைகளை கட்டியெழுப்புகிறது. நாட்டில் உருவாகியுள்ள புதிய உத்வேகத்துடன் இலங்கையர்களாகிய நம் அனைவருக்கும் "அழகான வாழ்க்கை" என்ற நம்பிக்கையை நம் இதயங்களில் சுமந்து புத்தாண்டில் புதிய உற்சாகத்துடன் முன்னோக்கிக் கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்காக சுற்றுச்சூழல் முன்னேற்றத்திற்கு உகந்த முன்னுரிமை அளிக்கும் ஒரு புதிய கலாசார நெறிமுறை இருப்பை உருவாக்குவதன் மூலம் நிலையான அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்குத் தேவையான கொள்கைகளை நடைமுறைப்படுத்தும்தலைமை பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறலை நாங்கள் ஏற்கிறோம்.


நாட்டிற்கும் மக்களுக்கும் பல நல்ல விடயங்களை நிறைவேற்ற உறுதி பூண்டு, நாட்டின் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாங்கள் அந்த வாக்குறுதிகளை தடைகளுக்கு மத்தியிலும் பின்வாங்காத துணிச்சலுடனும் அசைக்க முடியாத உறுதியுடனும் நிறைவேற்ற உறுதிபூண்டுள்ளோம். இந்த நாட்டு மக்களின் முகங்களில் நீடித்த புன்னகையைக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்ட இந்த செயற்பாட்டில், புதிய அணுகுமுறைகளுடன், ஒற்றுமையுடனும் பங்கேற்புடனும் ஒன்றிணைய உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன். சுபமான ஆரம்பத்திற்கு இந்தப் பொங்கல் கொண்டாட்டம் பாரிய ஆசீர்வாதமாக அமைய வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன்.

இலங்கை மற்றும் உலகளாவிய இந்து பக்தர்கள் அனைவருக்கும் நல்லிணக்கம் மற்றும் நன்றியுணர்வு நிறைந்த, வளமான மற்றும் மகிழ்ச்சியான தைப்பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்! என அவர் தெரிவித்தார். (ஙி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு இராசி பலன்கள்- 2025

## தகுதிக்கேற்ற புதிய வாய்ப்புகள் கிடைக்கும்



**குருவை இராசிநாதனாகக் கொண்ட தனுசு இராசி அன்பர்களே!**

இந்த ஆண்டு ஏற்ற இறக்கமாக பொருளாதாரத்தில் இருந்த பாதிப்புகள் படிப்படியாக விலகும். புதிய தொழில்களில் கால்பதிக்க போராடிக் கொண்டிருந்தவர்கள் எதிர்பார்த்த மாற்றத்தைக் காண்பார்கள். நண்பர்களுடன் இருந்த பிரச்சினைகள் தீர்வுக்கு வருவதால் அலுவலகச் சூழல்களில் இருந்த இறுக்கம் மறைந்து சகஜ நிலை உருவாகும்.

உங்களின் தகுதிக்கேற்ற புதிய வாய்ப்புகள் கிடைக்கும். உடல் நலம் சிறப்பாக இருக்கும். யோகா, பிராணாயாமம் போன்றவற்றை செய்து உடல் நலத்தையும், மனவளத்தையும் பெருக்கிக் கொள்வீர்கள். பொதுவாழ்வில் இருப்பவர்கள் திறமைசாலிகளை தங்கள் அருகில் வைத்துக் கொண்டு காரியமாற்றி நலமடைவார்கள். வழக்கு விவகாரங்களில் நிதானமாகவும், விட்டுக் கொடுத்தும் நடந்துகொண்டு வெற்றி பெறுவீர்கள்.

**குடும்பம்:** சகோதர, சகோதரிகள் சட்டென்று உங்களை எடுத்தெறிந்து பேசிவிடலாம். அதனால் உங்களின் ரகசியங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். தள்ளிப்போய் வந்த திருமணம் திடீரென்று முடிவாகி திருமண வாய்ப்பைச் சிலர் பெறக்கூடும்.

தந்தையாருக்கு உடல் நலத்தில் சிறு சிறு உபாதைகள் அடிக்கடி ஏற்படக்கூடிய நிலை உள்ளதால் கவனமாக இருந்து வருவது நல்லது. கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்வதன் மூலம் குடும்பத்தில் சில சங்கடங்களைத் தவிர்க்கலாம். வேலை நிமித்தம் குடும்பத்தை விட்டுப் பிரிந்திருந்த தம்பதி இப்போது சேர்ந்து வாழச் சந்தர்ப்பம் உருவாகும்.

**ஆரோக்கியம்:** உடலில் ஏற்படும் சிறிய உபாதைகளுக்கு உடனுக்குடன் வைத்தியம் செய்து கொண்டால் மருத்துவச் செலவுகளைக் குறைக்கலாம். நீண்ட நாட்களாக இருந்து வரும் பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தவும். எந்தக் காரியத்தையும் சோம்பேறித்தனம் கொள்ளாமல் உடனடியாகச் செய்வது நல்லது.

**பொருளாதாரம்:** பங்குச் சந்தை விடயங்களில் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளுக்குத் தேவையான அறிவுரைகளையும், ஆலோசனைகளையும் வழங்குவீர்கள். கவலை கொள்ள வைத்த கடன் தொல்லைகள் குறைவதால் உங்களின் மனதில் தைரியம் பிறக்கும். பூர்வீகச் சொத்தில் இருந்த இழுபறியான நிலைமை மாறும். தடைக்கற்களைப் படிக்கற்களாக மாற்றி வெற்றி நடைபோடுவீர்கள்.

**உத்தியோகத்தர்கள்:** உத்தியோகத்தர்கள் விரும்பிய இடமாற்றங்களைப் பெறுவீர்கள். உங்கள் வேலைகள் அனைத்தும் திட்டமிட்டபடியே குறித்த காலத்திற்குள் முடிவடையும். உங்களின் வேலைகளில் தெளிந்த மனநிலையுடன் ஈடுபடுவீர்கள். மேலதிகாரிகளிடம் சுமுகமான உறவு நிலை உண்டாகும். சக ஊழியர்களின் குறைகளை முன்னின்று தீர்த்து வைப்பீர்கள். புதிய முயற்சிகளை நன்கு ஆலோசித்த பிறகே செயற்படுத்தவும். கூட்டாளிகளும் நண்பர்களும் அனுசரணையாக இருப்பார்கள். கடன் கொடுக்காமல் முடிந்தவரை தவிர்க்கவும். பழைய கடன்களை சீரிய முயற்சியின் பேரில் படிப்படியாகத் திருப்பிச் செலுத்தி விடுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு:** கடன் விடயத்தில் கவனமாக இருந்தால் மன நிறைவிற்கு குறைவிராது. வியாபாரம் லாபகரமாகவே நடைபெற்று வரும். நாளுக்குநாள் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்று வியாபாரத்திலும் வளர்ச்சியைக் காண்பது அவசியமாகும்.

அதேநேரத்தில் அவர்களைத் திருப்தியடையச் செய்யும் வகையில் தரமான பொருள்களைக் கொள்முதல் செய்து வைப்பது வியாபாரத்தை பெருக்க உதவும். தொழில் வளர்ச்சியும் வருமானமும் சீராக இருந்து வரும் என்றாலும் செலவுகளை கட்டுப்படுத்துவதன் மூலம் கடன் வாங்கும் அவசியம் ஏற்படாமல் தவிர்க்கலாம். ஒழுங்காகத் திட்டமிட்டு முறைப்படி செயற்படுவதன் மூலம் தொழிலில் படிப்படியாக முன்னேற்றப் போக்கைக் காணலாம்.

**பெண்கள்:** பெண்களுக்கு இந்த ஆண்டில் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் கிடைக்கும். பெரியோர்களின் ஆதரவு நிறைந்திருக்கும். பொருளாதாரத்தில் சிறப்புகளைக் காண்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கௌரவத்தை தக்க வைத்துக் கொள்வீர்கள்.

ஆடை, அணிகலன்களை வாங்கி மகிழ்வீர்கள். கடந்த காலங்களில் ஏற்பட்ட விரய செலவுகளை குறைப்பீர்கள். பணி யாற்றும் பெண்கள் புதிய உத்வேத்துடன் செயற்பட்டு மன நிறைவு பெறுவீர்கள். ஆன்மிக எண்ணங்கள் வளர்ச்சி பெற்று புதிய சக்தியை உருவாக்கித் தரும். சமூகத்திலும் உறவினர்களிடமும் நற்புகழ் கிடைக்கும். வீட்டை அலங்காரம் செய்வதில் மனம் ஈடுபாடு கொள்ளும். ஆடை ஆபரணச் சேர்க்கை நிச்சயம் உண்டாகும்.

**அரசியல்வாதிகள்:** அரசியல்வாதிகள் பொறுப்புடனும் கவனத்துடனும் செயற்படுவீர்கள். மேலிடத்தின் கருணைப் பார்வை உங்களுக்கு உந்து சக்தியாக அமையும். சில நேரங்களில் உட்கட்சிப் பூசல்களில் சிக்கி மனவருத்தத்துக்கு ஆளாவீர்கள். பிறருக்கு வாக்குக் கொடுக்கும்போது நன்றாக யோசிக்கவும். மற்றபடி தொண்டர்களின் ஆதரவு தொடர்ந்து கிடைக்கும். பயணங்களால் நன்மை உண்டாகும்.

**கலைத்துறையினர்:** கலைத்துறையினர் தேவைக்கேற்ப வருமானத்தைக் காண்பீர்கள். உங்களின் திறமைகள் வெளிப்பட்டு பாராட்டுகளைப் பெறுவீர்கள். புதிய கலைஞர்கள் நண்பர்கள் ஆவார்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். வாய்ப்புகள் அதிகமாகக் கிடைக்கும். அடிக்கடி வெளியூர் பயணங்கள் வந்து சேரும். ஒரே நேரத்தில் பலவிதமான வாய்ப்புகள் வந்து சேரும். எதற்கும்




தகுந்த ஆலோசனைகளை மேற்கொண்டு முடிவுகளை எடுப்பது நல்லது. பத்திரிகை தொழில் சார்ந்தவர்களுக்கு நற்பெயர் கிடைக்கும்.

**மாணவர்கள்:** மாணவர்களுக்கு பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் அன்பு கிடைக்கும். மனதில் உற்சாகம் பிறக்கும். உங்களின் முயற்சிகள் தடைகளைத் தகர்த்து தாமதமின்றி வெற்றி பெறும். விளையாட்டில் சாதனைகளைச் செய்வீர்கள். கணிதம், வருமானவரி, வரவு செலவு தணிக்கை, நிர்வாகம், ஓவியப் பயிற்சி பெறும் மாணவர்கள் சிறப்பாகப் படிப்பர்.

விளையாட்டுகளில் சாகசம் புரிவீர்கள். மாணவர்கள் புகழும் விருதும் பெறுவார்கள். மனம் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். தெய்வ வழிபாடுகள் நல்வழிப்படுத்தும். தைரியமான செயல்கள் செய்யும் வாய்ப்பு உருவாகும்.

நண்பர்கள் உதவிகரமாய் இருப்பார்கள். உடல் நலத்தில் கவனம் வேண்டும். பெற்றோருடன் உறவு நிலை சுமுகமாய் இருக்கும்.

**மூலம்:** இந்த ஆண்டு இலாபம் உண்டாகும். பண விடயங்களைக் கையாளுவதில் கவனம் தேவை. உடனிருப்பவர்களுடன் முக்கியமான விடயத்தைப் பகிர்வதில் கவனம் தேவை. விற்பனையில் இலாபத்தை ஈட்டுவீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும். பெற்றோர்களின் சொற்படி நடப்பது நன்மை தரும்.

பொன்பொருள் சேர்க்கை உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். எந்த ஒரு விடயத்திலும் அவசரம் காட்ட வேண்டாம். நன்மை, தீமைகள் பற்றி ஆலோசித்து முடிவு எடுப்பது அவசியம். காரிய அனுகூலம் உண்டாகும். காரிய தடைதாமதம் ஏற்படும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும்.

**பூராடம்:** இந்த ஆண்டு மனம் மகிழும்படியாக எல்லாம் நடந்து முடியும். தொழில் வியாபாரம் மந்தமாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் தாமதம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. பணவரத்து இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். குடும்பத்தில் இருப்பவர்களிடம் இருந்து மனம் நோகும்படியான வார்த்தைகள் வெளிப்படலாம். அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகள் பற்றிய கவலை உண்டாகும். நிதானமாக செய்யும் செயல்கள் வெற்றியைத் தரும்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்:** இந்த ஆண்டு எடுத்த காரியத்தை வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. தெய்வ வழிபாடுகள் உங்களுக்கு வெற்றி உண்டாகும். பொறுப்புகள் வாய்ந்த பதவிகள் கிடைக்கும். மேலிடத்தின் உத்தரவுகளைக் கேட்டு நடந்தால்முன்னேற்றம்காணும் காலம். நண்பர்கள் அனுகூலம் கிடைக்கும். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்கள் உண்மையாக இருப்பார்கள். அதிக ஆர்வத்துடன் வேலை செய்வார்கள். முன்னேற்றம் காணப்படும். வியாபாரிகளுக்கு ஓடர்கள் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். ஆனாலும் இலாபம் ஏற்படும்.

**பரிகாரம்:** அடிக்கடி சித்தர்கள் ஆலயத்திற்குச் சென்று நெய் தீபம் ஏற்றி வரவும்.

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன், வெள்ளி .

**அதிஷ்ட எண்கள்:** 1, 3.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கடஹர சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு மூல மூர்த்தி பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப்பெருமான் திரு வீதி வலம் வருவார் என ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (6)

## மீனவர்களின் தேவைகள் தொடர்பில் மகஜர் கையளிப்பு

(சாவகச்சேரி)

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரை யாழ். இந்திய துணைத்தூதுவர் சாய் முரளி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது மீனவர்கள் தமது வாழ்வாதாரப் பிரச்சினைகள் குறித்து துணைத் தூதுவரின் கவனத் திற்கு கொண்டு சென்றிருந்தனர். குறிப்பாக இழுவை மடிப் படகுகளால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் நிலை குறித்தும் மீனவர்களின் தேவைகள் குறித்தும் இந்திய துணைத் தூதர் மீனவர்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

குறித்த சந்திப்பின் போது கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளால் யாழ்.இந்திய துணைத்தூதுவருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இதன்போது யாழ்.இந்திய துணைதூதுவராலய அதிகாரிகளான செல்வி ரம்யா மற்றும் நாகராஜன், அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.(6-30)




## இராசிபலன்

14.01.2025
தை 01 , செவ்வாய்க்கிழமை
பிரதமை பின்னிரவு 4.29 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 11.24 மணிவரை

சுபநேரம் 11.04-12.34 மணிவரை
இராகுகாலம் 3.34-5.04 மணிவரை
தைப்பொங்கல் திருநாள்

சந்திராஷ்டமம்
கேட்டை, மூலம்

வளவன்

**மேஷம்** உற்றார் உறவினர்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வழிபாடு காரிய வெற்றி தரும், உற்சாகமான நாள்.

**கடகம்** வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள், எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், போசன சுகமுண்டு, உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்** சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், திடீர் பயணமொன்று ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி** உறவினர் வழியில் இனிய சம்பவமொன்று நடைபெறலாம், புதிய பொருட்களின் சேர்க்கையுண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுறுசுறுப்போடு செயற்படும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**தனுசு** கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், திடீர் செலவுகளை சமாளிக்க வேண்டிய வரலாம், எதையும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மகரம்** நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், உறவினர் வருகையுண்டு.

**கும்பம்** தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள்.

**மீனம்** தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

மனித மனம் உண்டியல் போன்றது. எதைப் போடுகின்றோமோ அதுதான் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் சிறப்பிதழ்

## ஏற்றம் இனி ஏற்றம்



தையும் பூத்தாச்சு
தங்கச் சூரியன் வந்தாச்சு
கையும் நிறைந் தாச்சு
காய் கனிகள் விளைஞ்சாச்சு

நெல்லும் வந்தாச்சு
நீண்ட வாழ்வும் வளமாச்சு
கல்லும் கவி பாடும்
காற்றில் கீதம் இசைச்சாச்சு

பாலும் பொங்கி வர
பட்டிப் பசுவும் துள்ளிவர
கோலப் பானை பொங்கல்
குரவை வைத்துக் கொண்டாடுவோம்

மூங்கினில் புல்லாங் குழல்
மோகனப் பண் பாடும்
எங்கும் எழிற் பொங்கல்
ஏற்றம் இனி ஏற்றம்

- கரவைக்கூத்தன் -

## பொங்கிடும் மங்களம் அகிலம் எங்கும் பொலிவுற வேண்டுகின்றோம்





தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் மானிட வாழ்வின் ஆதார புருஷர்களாகிய உழவர் பெருமக்களையும் இயற்கையின் கொடைகளையும் போற்றி வழிபாடு செய்யும் உன்னத நன்நாளாகும்.

எல்லாச் சமயத்தவர்களும் போற்றி வழிபடும் புண்ணிய நன்நாளாகும். தமிழர் வாழ்வை மேம்படுத்தும் கலாச்சார விழுமியங்களை வாசகர்களுக்கு காத்திரமாக வழங்குவதில் "வலம்புரி" முதன்மை பெறுகின்றது.

இன்றைய தைத்திருநாளில் பொங்கிடும் மங்களம் அகிலம் எங்கும் பொலிவுற, எமது பிரார்த்தனைகளும், நல்லாசிகளும், உலகெல்லாம் வாழும் தமிழ்மக்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

சிவஸ்ரீ கலாநிதி து.கு.ஜெகதீஸ்வரக்குருக்கள்,
தலைவர்,
சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

## உண்பதற்கு வழி சமைத்த தெய்வத்தைப் போற்றுவோம்



உலகம் முழுவதும் வாழும் சைவத் தமிழர்களின் உன்னத பண்டிகைத் திருநாளாகத் தைப்பொங்கல் விளங்குகிறது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனுக்கு தாம் வாழும் இல்ல முற்றத்தில் பொங்கிப் படைத்து வழிபாடு செய்யும் பாரம்பரியம் பண்டுதொட்டு இன்றுவரை தொடர்கிறது. வெளிச்சம் தந்து, விடிவு தந்து எம்மை வாழ வைக்கும் கதிரவனுக்கு நன்றி செலுத்தும் நாளாக இந்நாள் அமைந்துள்ளது. தைப்பொங்கல் உழுது பயிர் செய்யும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி கூறும் நன்நாளாகும். பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களால் நாம் உண்டு மகிழ்கிறோம். உழவர் பெருமக்களை உயரத்தில் வைத்து போற்றியவர்கள் தமிழர்கள்.

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்*
*மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல்பவர்"*

என்ற வள்ளுவர் வாக்குக்கு அமைய நாம் வாழ உதவும் உழவர் பெருமக்களை இந்நாளில் உளமார வாழ்த்துவோம்.

தைப்பொங்கல் நாளில் நாம் வசிக்கும் இல்லங்களின் வாசலில் தவறாது பொங்க வேண்டும். பால் பொங்கும் போது மூப்பு அடிப்படையில் பானையில் ஒவ்வொருவராக அரிசியிட்டு தினமும் உண்பதற்கு வழிதந்த தெய்வத்தைப் போற்ற வேண்டும். இந்த பண்பாட்டு மரபை நாம் என்றும் கைவிடக்கூடாது. இப்பண்பாட்டை நாம் மறப்போமானால் எமது அடுத்த தலைமுறையிடம் எமது பாரம்பரியங்கள் தெரியாமலே போய்விடும். பொங்கிப்படைத்த உணவை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு பகிர்ந்தளித்து அன்பைப் பெருக்க வேண்டும்.

எங்கள் சமூகத்தின் உயர்ந்த கலைமரபை பொங்கல் காலத்தில் எம்முன்னோர் அரங்கேற்றி மகிழ்ந்தனர். எனவே எமது பாரம்பரிய கலைவடிவங்களை அடுத்த தலைமுறை பின்பற்றுவதற்கு நாம் வழிசெய்ய வேண்டும். கலைகள் கவலையை போக்கக்கூடியவை. மனதுக்கு அமைதியை தரக்கூடியவை. ஒவ்வொரு தனிமனிதனின் ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கு பண்டிகைக்கால கலை அரங்குகள் கூட்டப்பட வேண்டும்.

எங்கள் மண்ணில் அறம் தழைக்கவும் அன்பை வளர்க்கவும் நல்ல பண்புகளை நாம் பேணவும் பொங்கல் நாளை சிறப்பாகக் கொண்டாடவேண்டும். அன்பர்கள் அனைவருக்கும் இதயபூர்வமான பொங்கல் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்து அமைகிறேன்.

கலாநிதி ஆறு.திருமுருகன்,
தலைவர்,
ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை,
தலைவர் - சிவபூமி அறக்கட்டளை.

## பாலே பொங்கு!

பாரெங்கும் வளங்கள் பல்கிப் பெருகிடவும்
சீரெங்கும் ஓங்கிச் சகமது செழித்திடவும்
ஊரெங்கும் உள்ளங்கள் உவகையால் நிறைந்திடவும்
ஏரெங்கும் உயர்வுதரப் பாலே நீ பொங்கு !

நாயன்மார்கட்டு - ப. மகேந்திரதாசன்



# தை பிறந்தால் வழி பிறக்கும்

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது பழமொழி, தை மாதம் தொடங்கினாலே சுப நிகழ்ச்சிகள் களைகட்டத் தொடங்கிவிடும். தை மாதத்தின் தொடக்கமே பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடும் வழக்கம். நம் மரபில் உண்டு. இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் தை முதல்நாளைப் பண்டிகையாகக் கொண்டாடுவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக சூரிய நாட்காட்டியை அடிப்படையாகக் கொண்டு மாதங்களைக் கணக்கிடும் மாநிலங்களில் இந்த நாள் முதன்மையான பண்டிகையாகத் திகழ்கிறது. அந்த வகையில் தமிழகத்தில் சூரிய பகவான் மகர ராசிக்குள் பெயர்ச்சியாகும் தை முதல்நாளை சூரியனை வழிபட உகந்த நாளாகக் கொண்டாடி மகிழ்கிறோம்.

உழவுத் தொழிலுக்கு உறுதுணை செய்பவர் சூரிய பகவானே. கண்கண்ட கடவுளான சூரியனின் ஆற்றலே மழை பொழியவும், நிலம் செழிக்கவும், பயிர் விளையவும், உயிர்கள் வாழவும் காரணமாகிறது. அப்படிப்பட்ட சூரிய பகவானுக்கு நாம் நன்றி செலுத்தும் விதமாகக் கொண்டாடப்படும் பண்டிகையே பொங்கல் பண்டிகை. சூரியனின் நகர்வை அடிப்படையாகக் கொண்டே தமிழ் மாதங்கள் கணக்கிடப்படுகின்றன. அந்த வகையில் சூரியன் காலச் சக்கரத்தின் முதல் ராசியான மேஷ ராசியில் பிரவேசிக்கும் காலத்தில் ஆண்டு தொடங்கும். இந்த ஆண்டை உத்தராயனம், தட்சிணாயனம் என இரண்டாகப் பிரிக்கிறார்கள். தை முதல் ஆனி வரையிலான மாதங்கள் உத்தராயனம் என்றும் ஆடி முதல் மார்கழி வரையிலான ஆறு மாதங்கள் தட்சிணாயனம் என்றும் அழைக்கப்படுகின்றன. நமக்கு ஓர் ஆண்டு என்பது தேவர்களுக்கு ஒரு நாள் என்பது நம்பிக்கை.

உத்தராயனம் தேவர்களின் பகல் பொழுது என்றும் தட்சிணாயனம் இரவுப் பொழுது என்றும் புராணங்கள் சொல்கின்றன. அந்த வகையில் தேவர்களின் பகல் பொழுதின் தொடக்கமான தை மாதத்தின் தொடக்கமே மகர சங்கராந்தி. சங்கராந்தி என்றால் நகர்தல் என்று பொருள். சூரியன் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்குள் நகர்வதால் இந்தப் பெயர் ஏற்பட்டது. தை முதல்நாள் பொங்கல் பண்டிகை அன்று சூரியனை வணங்கிப் பொங்கலிட்டு கரும்பு, பழங்கள், வெற்றிலை, பாக்கு ஆகியன வைத்து வழிபட வேண்டும். வீட்டில் சூரிய ஒளிபடும் ஏதேனும் ஓரிடத்தில் இந்த வழிபாட்டைச் செய்வது மிகவும் சிறப்பு.



பூஜை செய்யும் இடத்தில் சந்திர, சூரியர்கள் கோலம் இட்டுக்கொள்ள வேண்டும். பொங்கல் பானையை நடுவே வைத்து சூரியனுக்கு தீபாராதனை காட்டி பின் நிவேதனம் செய்ய வேண்டும். பொதுவாக சர்க்கரைப் பொங்கல் செய்வதுவே வழக்கம். சில வீடுகளில் வெண் பொங்கலும் சேர்த்து செய்வார்கள். சூரியபகவானைக் கண்டு வணங்குவதோடு பின்வரும் மந்திரங்களையும் சொல்லித் துதிக்கலாம்.

ஓம் மித்ராய நம: ஓம் ரவயே நம:
ஓம் சூர்யாய நம: ஓம் பாநவே நம:
ஓம் ககாய நம: ஓம் பூஷ்னே நம:
ஓம் ஹிரணியகர்பாய நம: ஓம் மரீசயே நம:
ஓம் ஆதித்யாய நம: ஓம் ஸவித்ரே நம:
ஓம் அர்காய நம:
ஓம் பாஸ்கராய நம

இந்த மந்திரங்களை தைப்பொங்கல் நாளில் எத்தனை முறை சொல்கிறோமோ அவ்வளவு நன்மைகள் கைகூடும். சூரியன் ஆரோக்கியத்தின் அதிபதி. எனவே சூரிய வழிபாடு செய்வதன் மூலம் நம் ஆரோக்கியம் பெருகும். முன்னோர் ஆசி கிட்டும். இந்தப் பொங்கல் பண்டிகை அனைவருக்கும் சகல நலன்களையும் தரும் திருநாளாகத் திகழ வலம்புரி நாளிதழ் சார்பில் உங்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாழ்ப்பாணம் - நல்லூர் சிவன் கோவில் தேர்த்திருவிழா நேற்று திங்கட்கிழமை காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

படங்கள்: ஐ.சிவசாந்தன்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 2021- 2022 கல்வியாண்டில் பயிற்சியை மேற்கொண்டு இலங்கை பரீட்சை திணைக்களம் நடத்திய இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பயிற்சி சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த சனிக்கிழமை கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது.

## கைதான 8 மீனவர்களும் விளக்கமறியலில்

(தருமபுரம்)

மன்னார் வளைகுடா கடற்பரப்பில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த 8 இந்திய மீனவர்களும் கடற்படையினரால் கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்நிலையில், கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற பதில் நீதவான் முன்னிலையில் அந்த மீனவர்களை ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (8-316)

# கடற்கரையில் கரையொதுங்கிய கண்ணன் ராதை சிலை

## வத்திராயனில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி கிழக்கு வத்திராயன் கடற்கரை பகுதியில் கண்ணன் ராதை ஆகிய இருவரும் இணைந்த தெய்வீக சிலை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

இந்நிலையில் குறித்த சிலையை அதிகளவான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

அண்மைக்காலமாக காலநிலையில் ஏற்பட்ட மாற்றங்களினால் கடல் சீற்றங்கள், சூறாவளி, புயல்கள், தென் கிழக்கு ஆசியாவின் பல நாடுகளில் ஏற்பட்டது.

இந் நிலையில் அங்கிருந்து கடலில் அடித்துச் செல்லப்பட்டு இங்கு குறித்த சிலை கரையொதுங்கி இருக்கலாம் என நம்பப்படுகின்றது. (6)













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்க சாதிச்சிட்டீங்க

# கார் பந்தயத்தில் வென்ற அஜித்துக்கு ரஜினிகாந்த் வாழ்த்து






(டில்லி)

டுபாயில் நடந்த 24H சீரிஸ் கார் பந்தயத்தில் அஜித்குமார் ரேசிங் அணி மூன்றாவது இடம்பிடித்து அசத்தியுள்ளது.

தனது அணி மூன்றாவது இடம்பிடித்த நிலை யில், நடிகர் அஜித்குமார், இந்திய தேசியக் கொடியுடன் வலம் வந்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

மேலும் மகிழ்ச்சியில் அஜித்குமார் சக அணியினருடன் துள்ளி குதித்து வெற்றியை கொண்டாடினார்.

இவரது வெற்றிக்கு ரசிகர்கள், திரைத் துறையை சேர்ந்த பலரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் நடிகர் ரஜினிகாந்த் அஜித்குமாருக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ரஜினி தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது, என் அன்பான அஜித்குமாருக்கு வாழ்த்துகள்.

நீங்க சாதிச்சிட்டீங்க. கடவுள் உங்களை ஆசீர் வதிப்பார். லவ் யூ என குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## சிந்து நதியில் தங்கம்; குவியும் மக்களால் பரபரப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் உள்ள சிந்து நதியில் தங்கம் புதைந் திருப்பதாக வெளிவந்திருக் கும் தகவல் அறிந்த மக்கள் சிந்து நதி நோக்கி படை யெடுக்கத் தொடங்கியுள்ள தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டு ள்ளது. இதையடுத்து பாகிஸ் தான் அரசு 144 தடை உத் தரவு பிறப்பித்துள்ளது

சிந்து நதியின் அருகே அதா வது பாகிஸ்தானில் உள்ள பஞ்சாப் மாகாணம் அருகே 32 கிலோமீற்றர் ஆழத்தில் பல கோடி ஆண்டு களுக்கு முன்பு டெக்டோனிக் பிளேட்டு கள் மோதி மலை உருவான போது அப்போது ஏற்பட்ட அரிப்பு காரணமாக தங்கது கள்கள் சிந்து நதியின் அடித்து வரப்பட்டு கொண்டு வரப் பட்டு இருக்கலாம் என்று கூறப்படு கிறது.

சிந்து நதி இந்தியா வுக்கு சொந்தமாக இருந்த நிலை யில் தற்போது இந் தியா பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுக்கும் சொந்தமாக உள்ளது.

நதி நீர் பங்கீடு தொட ர்பாக இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தம் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## லாஸ் ஏஞ்சல்ஸ் தீப்பரவல் இதுவரை 24 பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் ஒரு வார காலமாக கட்டுக் கடங்காத காட்டுத் தீயால் இதுவரை உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 24 ஆக அதிகரித் துள்ளது.

கடந்த 7 ஆம் திகதி ஏற்பட்ட காட்டுத் தீ 50,000 ஏக்கர் அளவுக்கு பரவி உள்ளதுடன் இதில் சுமார் 40,000 ஏக்கர் பரப்பளவு முழுமையாக தீயில் எரிந்துள்ளது

இதில் சுமார் 7,500 தீய ணைப்பு படையினர், ஹெலி கொப்டர்கள், விமானங்கள் மூலம் தீயை அணைக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

தண்ணீர் பற்றாக்குறை, தீயணைப்பு படையினர் பற் றாக்குறை, காற்றின் வேகம் அதிகரிப்பு உள் ளிட்ட கார ணங்களால் தீயை அணைக் கும் பணிகளில் பின்னடைவு ஏற்பட்டிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காட்டுத் தீயால் லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் இதுவரை 24 பேர் உயி ரிழந் துள்ளதுடன் பலரை காண வில்லை. ஏராளமானோர் தீக்காயம் அடைந்துள்ள நிலை யில் சுமார் 4 லட்சம் பேர் வீடுகளை விட்டு வெளியேறி உள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (நி-6)



## அமெரிக்காவின் உயரிய விருது போப் பிரான்சிசுக்கு வழங்கி வைப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதியின் உயரிய மெடல் ஆப் பிரீடம் விருது போப் பிரான்சிசுக்கு ஜனாதிபதி ஜோ பைடனால் முதன் முறையாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் போப் பிரான் சிசிடம் தொலைபேசியில் உரை



யாடிய ஜனாதிபதி பைடன் ஏழை மக்களுக்கு சேவையாற்றிய போப் பிரான்சிஸின் அர்ப் பணிப்பை பாராட்டினார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி பைடன் வெளியிட்ட செய்தியில் உங்கள் பணிவையும் பண்பை யும் வார்த்தைகளால் வர்ணிக்க இயலாது. நீங்கள் காட்டும் அன் புக்கு ஈடு இணை இல்லை என் றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை அமெரிக்கா வின் வளர்ச்சி, பண்புகள், பாது காப்பு, உலக அமைதி போன்ற வற்றில் சிறந்த பங்காற்றிய வர்க ளுக்கு ஜனாதிபதி மெடல் ஆப் பிரீடம் விருது வழங்கப்படுகிறது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம், கைதிகள் விடுவிப்பு தொடர்பில்

# நெதன்யாகு-ஜோ பைடன் பேச்சுவார்த்தை

(வோஷிங்டன்)

**காசா போர் நிறுத்தம் மற்றும் பிணைக்கைதிகளை விடுவிப்பதற் கான தற்போதைய நிலைமை குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.**



இஸ்ரேல், ஹமாஸ் இடையே நீண்ட காலமாக மோதல் நடந்து வருகிறது. போர் நிறுத்தத்தை கொண்டு வர பல்வேறு நாடுகள் முயற்சி கள் மேற்கொண்டன. ஆனால் எந்த உடன்பாடும் எட்டப் படவில்லை.

இந்நிலையில் காசா போர் நிறுத்தம் மற்றும் பிணைக் கைதிகளை விடுவிப்பதற்கான தற்போதைய நிலைமை குறித்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவிடம் அமெ ரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் சந்தித்து பேசினார்.

இது குறித்து இஸ்ரேல் பிரத மர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் கூறியிருப்ப தாவது, பேச்சு வார்த்தை களின் முன்னேற்றம் குறித்து அமெரிக்க ஜனாதிபதியிடம் பிரதமர் நெதன்யாகு விவாதித் தார். இதன்போது பயங்கர வாதிபிமான உதவிகளை அதிகரிக்க வேண்டும் என இஸ் ரேல் பிரதமரிடம் பைடன் வலியுறுத்தி உள்ளார் என வெள்ளை மாளிகை தெரி வித்துள்ளது. (நி-6)

## கனடா பிரதமர் போட்டியில் அனிதா ஆனந்த் விலகல்



(ஒட்டாவா)

கனடா பிரதமர் போட்டி யிலிருந்து தான் விலகுவதாக அனிதா ஆனந்த் தெரிவித் துள்ளார்.

கனடா பிரதமர் பதவியில் இருந்து ஜஸ்டின் ட்ரூடோ சமீபத்தில் விலகினார். இந் நிலையில் அடுத்த பிரதமருக் கான போட்டியில் அமைச்சர் அனிதா ஆனந்த் உட்பட 9 பேர் களத்தில் குதித்தனர்.

இந்த நிலையில் தமிழ கத்தை பூர்வீகமாக கொண்ட அனிதா ஆனந்த், தான் பிர தமர் போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்துள் ளார்.

இதுதொடர்பாக அவர் கூறும் போது, பிரதமர் பதவிப் போட்டியில் இருந்து விலகியுள் ளேன். மேலும் பாராளுமன்ற த்திற்கும் மீண்டும் போட்டி யிடப்போவதில்லை. தனக்கு முக்கிய அமைச்சரவை இலா காக்களை வழங்கிய ஜஸ்டின் ட்ரூடோவுக்கு நன்றி.

என்னை பாராளுமன்ற உறுப்பினராக்கிய ஒக்வில்லி தொகுதி மக்களுக்கு உண் மையாகவே நன்றியுடன் இருக்கிறேன்.

கல்வித் துறைக்குத் திரும்பு வதன் மூலம் எனது வாழ்க் கையின் அடுத்த அத்தியாயத் தைத் தொடங்க உள்ளேன் என அவர் தெரிவித்தார். (நி-6)

## ஜம்மு-காஷ்மீர்

# இசட்மோர் சுரங்கப்பாதையை திறந்து வைத்த பிரதமர் மோடி

(டில்லி)

ஜம்மு-காஷ்மீரில் உள்ள சோனா மார்க் (இசட்-மோர் -Z-Morh) சுரங்கப்பாதையை ஜம்மு-காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா முன் னிலையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று திறந்து வைத்தார்.



சோனாமார்க் சுரங்கப் பாதையின் பணிகள் மே 2015 ஆம் ஆண்டு தொடங்கியது. ஆனால் பொருளாதார சவால் கள் காரணமாக 2018 ஆம் ஆண்டு இந்த பணிகள் நிறுத் தப்பட்டதால் இந்த திட்டம் முடி வடைய தாமதம் ஏற்பட்டது. பின்னர், இந்தத் திட்டம், ஒக் டோபர் 2012 ஆம் ஆண்டு அப்போதைய தரைவழிப் போக்குவரத்து அமைச்சராக இருந்த சி.பி.ஜோஷியால் அடிக் கல் நாட்டப்பட்டது.

ரூ.2,700 கோடிக்கும் அதிக மான மதிப்பீட்டில் இந்த சுரங் கப் பாதை கட்டிமுடிக்கப்பட் டுள்ளது. மேலும் லடாக் பிராந்தி யத்தில் நாட்டின் பாதுகாப்புத் தேவைகளைப் பொறுத்தவரை சோனாமார்க் சுரங்கப்பாதை மிகவும் முக்கியமானதாகும்.

6.5 கிலோமீற்றர் நீளமுள்ள சோனாமார்க் சுரங்கப் பாதை யின் மூலம் மக்கள், சுற்றுலா பயணிகள் சுலபமாக சோனா மார்க் பகுதியை பார்வையிட முடியும். இதன்போது சுரங்கப் பாதை கட்டுமானத்துக்கு அய ராது பணியாற்றிய தொழிலாளர் களை சந்தித்து பிரதமர் மோடி பாராட்டினார். (நி-6)

# மகாகும்பமேளாவில் 50 லட்சம் பக்தர்கள் பங்கேற்பு

(டில்லி)

உத்தரப்பிரதேச மாநி லம் பிரயாக்ராஜில் நேற்று தொடங் கியிருக்கும் மகா கும்பமேளா வின் முதல் நாளிலேயே 50 லட் சம் பக்தர்கள் சங்கமம் பகுதி யில் கலந்து கொண்டுள்ளனர். மகா கும்பமேளா திருவிழா வின்போது கங்கை, யமுனை, சரஸ்வதி ஆறுகள் சேரும் சங் கமம் இடத்தில் நேற்று முதல் லட்சக்கணக் கான பக்தர்கள் புனித நீராடி வருகிறார்கள்.

12 ஆண்டுகளுக்கு ஒரு முறை மகா கும்பமேளா நடை பெறுகிறது. 4000 ஹெக்டே யர் பரப்பளவில் நடைபெறும் இந்த திருவிழா பெப்ரவரி 26 ஆம் திகதி வரை நடைபெற விருக்கிறது.

இந்த மகா கும்ப மேளா நிகழ்ச்சி ஏற்பாட்டுக்காக ரூபாய் 7000 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 45 நாட்களும் சிறப்பு ஏற்பாடுகள், ஏழு அடுக் குப் பாதுகாப்புப் பணிகள் செய் யப்பட்டுள்ளன. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 125 ரூபாய் வீதம்
# நெல்லினைக் கொள்வனவு செய்ய
# வவுனியா கூட்டுறவுச் சங்கம் தீர்மானம்

(வவுனியா)

**விவசாயிகளின் நன்மை கருதியும் பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களால் விவசாயிகளுக்கு செய்யக் கூடிய உதவியாகவும் காய்ந்த நெல்லை கிலோ ஒன்று 125 ரூபாய் வீதமும் காயாத நெற்களை 115 ரூபாய் வீதமும் கொள்வனவு செய்வதற்கு வவுனியா பலநோக்குக் கூட்டுறவு சங்கம் தீர்மானித்துள்ளது.**

வவுனியா பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தால் உலர்ந்த நெல்லை கிலோ ஒன்றிற்கு 125 ரூபாய் வீதம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக சங்கத்தின் தலைவர் ந.ஸ்ரீஸ் கந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில், தற்போதைய காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம் பொங்கல் தினத்திற்கு பின்னர் வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நெல்லை கொள்வனவு செய்ய உள்ளது.

விவசாயிகள் வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு நெல்லை வழங்க விரும்பின் ஓமந்தை, ஆறுமுகத்தான்புதுக்குளம், கல்நாட்டியகுளம், ஈச்சங்குளம் பகுதிகளில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் களஞ்சியசாலைகளில் நெல்லை கையளிப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை வவுனியாவின் சங்கத்திற்குரிய கட்டடங்களிலும் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருவதன் காரணமாக சுமார் 2,700 மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான நெல்லை இம்முறை வவுனியா பலநோக்கு கூட்டுறவு சங்கம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது. (8-250)

## கல்லாற்றில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு
## அதிகாரிகள் அசமந்தப்போக்கு
### மக்கள் குற்றச்சாட்டு

(தருமபுரம்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்லாற்றுப் பகுதியில் பல வருட காலமாக தொடர்ச்சியாக சட்ட விரோதமான முறையில் அப்பகுதியில் மணல் அகழ்வதற்கு அனுமதி வழங்கப்படாத பகுதியாக இருந்த போதிலும் அப்பகுதியின் ஊடாகவே தொடர்ச்சியாக இரவு பகலாக சட்ட விரோதமான முறையில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு மணல் அகழ்வு நடைபெற்று வருகிறது என பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதி ஊடாக சட்ட விரோதமான முறையில் மணல் கொண்டு செல்வதன் காரணமாக இவ்வீதியால் பயணிக்க முடியாத நிலையில் படுகுழியும் குன்றுமாக காணப்படுவதாகவும் மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அசமந்த போக்குடனே காணப்படுவதாக மக்கள் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-316)







தைப்பொங்கலை முன்னிட்டு வியாபாரம் களைகட்டியதையடுத்து நேற்றையதினம் கிளிநொச்சி, வவு னியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பொங்கல் பொருட்களை கொள்வனவு செய்வதில் பொது மக்கள் ஈடுபட்டு இருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

(படம்-தேவானந்தன், சப்த சாங்கரி, வசந்த ரூபன், ஜோசப்நயன், சதீஸ்)

## 200 போதை
### மாத்திரைகள் மீட்பு
### இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

200 போதை மாத்திரைகளுடன் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சந்தேகத்திற்கு இடமான இரு இளைஞர்களை பொலிஸார் சோதனையிட்ட வேளை 200 போதை மாத்திரைகளை பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.

அதனை அடுத்து இரு இளைஞர்களையும் கைது செய்த பொலிஸார் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-33)

## ஏ.ரி.எம் அட்டையை திருடி
## சுமார் 1இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொள்வனவு
### பொலிஸார் வலைவீச்சு

(வவுனியா)

நண்பனின் வீட்டில் வங்கி இலத்திரனியல் அட்டையை சூதானமாக திருடி பொருட்களை கொள்வனவு செய்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் உள்ள நண்பனின் வீட்டிற்கு சென்ற இளைஞன் ஒருவர் தனது நண்பனுடன் கதைத்துவிட்டு அவருடைய தந்தையின் வங்கி இலத்திரனியல் அட்டையினை சூதானமான முறையில் திருடிச் சென்று ஆடைகள், சப்பாத்து, மது என 1 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்துள்ளார்.

குறித்த இளைஞன் பொருட்களை கொள்வனவு செய்யும் போது இலத்திரனியல் அட்டை உரிமையாளருக்கு குறுஞ்செய்தி தொலைபேசிக்கு வந்துள்ளது. அதனையடுத்து உரிமையாளர் விரைந்து குறித்த இளைஞன் கொள்வனவு செய்த கடைக்கு சென்று சீசிரிவி கமராவில் சோதனை செய்தபோது தனது மகனின் நண்பனே திருடியமை தெரிய வந்துள்ளது. பின்னர் வங்கிக்கு தகவல் வழங்கப்பட்டு வங்கி கணக்கு இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டதனை தொடர்ந்து பொலிஸார் குறித்த இளைஞனை தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (8-299)

## ஔவையாரின் நினைவுதினம்
## வவுனியாவில் அனுஷ்டிப்பு



(வவுனியா)

வவுனியா சின்னப் புதுக்குளம், மாமடுவ சந்தியிலுள்ள ஔவையார் நினைவுத் தூபியில் அவரது நினைவு தினம் நேற்றுக்காலை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, ஔவையாரின் உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்ததுடன், தமிழ்மணி அகளங்கன் மற்றும் மாணவர்களால் நினைவு பேருரைகளும் இடம்பெற்றது.

வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திர குமார் கண்ணன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

## வவுனியா மாவட்டத்தில்
## தேர்தல் கடமையில் ஈடுபட்டோருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை!

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் தேர்தல் கடமையில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற தேர்தலானது கடந்த வருடம் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது தேர்தல் கடமைகளில் பல அரச உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

குறித்த உத்தியோகத்தர்களுக்கான தேர்தல் கடமைக்கான கொடுப்பனவுகள் பல மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ள போதும் வன்னித் தேர்தல் தொகுதியில் வழங்கப்படவில்லை என கடமையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (8-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பொங்கல் திருநாளில் அனைவரது
இல்லங்களிலும் நல்ஒளி வீச வாழ்த்தி மகிழ்கின்றோம்

**TKT நல்லெண்ணெய்** No1
mark

4 ஆவது தலைமுறையாக இன்றும் அதே தரத்துடன் பாரம்பரிய பழமை முறையில் மரச்செக்கிலிருந்து ஊற்றியெடுக்கப்படும் நல்லெண்ணெய்

It's an Authentic Sesame Oil and The Best One in Our Products

மொத்த மற்றும்
சில்லறை
விற்பனையாளர்...



**தயாரிப்பாளரும் ஏக விநியோகத்தரும்**

தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ்
நவாலி வீதி, மூத்த நயினார் கோவிலடி,
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

T.P: 077 832 8828, 077 652 8633, 021 225 5718

(C-2028.2088)



**அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்ததிரர் திருமண மண்டபம்**
(ASR WEDDING HALL)
**முகூர்த்த நாட்களுக்கான பதிவுகள்**

**எமது வாடிக்கையாளர்களுக்கும் அன்பர்களுக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

உங்கள் பிள்ளைகளின் திருமண வைபவம், பூப்புனித நீராட்டு விழாக்கள், கிறிஸ்தவ பதிவு திருமணங்கள், தென்னிந்திய பாடகர்களின் நிகழ்ச்சிகளை செய்ய விரும்புவோர்கள் பதிவுகளை மேற்கொள்ள நாடவேண்டிய மண்டபம் அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரர் கலாசார திருமண மண்டபம். திறமை வாய்ந்த போட்டோ, வீடியோ படப்பிடிப்பாளர்களை ஒழுங்கு செய்து தரப்படும்.

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை காலை 9 மணி முதல் மாலை 4.30 மணிவரையும் சனி காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரைக்கும் மண்டபத்தை பார்வையிடலாம்.

**ஞாயிறு விடுமுறை.**

இல.542, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி எண்
**021 222 1355**
**076 744 6064**
(2962)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | நெல்லியடி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 150 | 160-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 1000 | 1300 | 1000 | 900-1200 | 1200 |
| தக்காளி | 400 | 300 | 400 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 200 | 220 | 250-300 | 200 |
| கோவா | 180 | 200 | 250 | 250 | 300 |
| கரட் | 250 | 250 | 300 | 300 | 500 |
| பூசணி | 140 | 120 | 150 | 100 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 150 | 140 | 120 | 100-130 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 320 | 380 | 200-450 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 180 | 350 | 200 | 280 |
| பாகற்காய் | 600 | 800 | 600 | 500-550 | 800 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 200-250 | 400 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 | 150 | 200 |
| பயற்றங்காய் | 850 | 400 | 400 | 750-800 | 500 |
| லீக்ஸ் | 280 | 380 | 300 | 350 | 500 |
| பீற்றூட் | 650 | 500 | 500 | 370 | 600 |
| கறிமிளகாய் | 850 | 650 | 600 | 600-700 | 600 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 1600 | -- | -- |
| போஞ்சி | 400 | 250 | 400 | 250-300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 180 | 200 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 150 | 60-80 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 200 | 250-270 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 180 | .220 | 150 | 100-220 | 180-230 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 650 | 600 |
| வெங்காயப்பூ | 650 | 600 | 600. | -- | 800 |
| முள்ளங்கி | 200 | 120 | 200 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 180 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 100 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 90 | 100 |

# சந்தோசம் செழிப்புற இத்திருநாள் அமையட்டும்

## பொங்கல் வாழ்த்தில் சிறி பவானந்தராஜா எம்.பி



(யாழ்ப்பாணம்)

திருப்தியும் நலனும் இனியபுத் தாண்டும் உங்களுக்கு எப்போதும் நிலைத்திருக்க வேண்டியதாக விரும் புகிறேன். இந்தத் தைப்பொங்கல் பண் டிகை உங்கள் உழைப்பின் அரிய பலனாக உங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையும் செழிப்பும் அமைதியும் சமாதானமும் நிறைந்ததாக அமைய எனது வாழ்த்துக்கள் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ச.சிறிபவானந்தராஜா தெரிவித்தார்.

பொங்கல் தமிழரின் பாரம்பரியத்தை கொண்டாடும் மகத்தான திருநாளாக வும் இயற்கைக்கும் உழைப்புக்கும் நன்றி செலுத்தும் நாளாகவும் கருதப் படுகிறது. இந்தத் திருநாளில் உங்களின் உழைப்பையும் புதிய வெற்றிகளையும் கொண்டாடி உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிலைத் திருக்கவும் இத்திருநாள் அமையட் டும்.

இந்தத் திருநாளில் அனைவருக்கும் புதிய சக்தி, துடிப்பு மற்றும் முன்னேற்றம் ஆகியவை உண்டாக உங்கள் வாழ் வில் அமைதி மற்றும் சந்தோசம் நிலைத்திருக்க நான் வாழ்த்துகிறேன் என அவர் தெரிவித்தார். (நி-6)

# முச்சக்கரவண்டி மோ.சைக்கிள் விபத்து இருவர் படுகாயம்

(தருமபுரம்)

முச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் படுகாயம டைந்துள்ளனர்.

பரந்தன் பகுதியில் இருந்து கிளி நொச்சி நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியினை அதே பகுதியில் பய ணித்த மோட்டார் சைக்கிளின் முச்சக்கர வண்டியின் பின்புறம் மோதுண்டதில் அதன் பின்புறமாக வந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கி ளிலில் பயணித்த இருவர் படுகாயம டைந்த நிலையில் கிளிநொச்சி வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

# சைவசித்தாந்த வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

திருவாவடுதுறை ஆதீன சைவசித் தந்தப் பயிற்சி மையம் மற்றும் இலங்கை சைவநெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் சைவசித்தாந்த வகுப்புக்கள் இடம்பெற வுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக் கிழமை நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற அலுவலகத் தில்குறித்த வகுப்புக்கள் ஆரம்பமாகவுள் ளன. ஒரு வருடகால நிறைவில் பயிற்சி யினை நிறைவு செய்தவர்களுக்கான "சித்தாந்தத்தின்" பட்டம் திருவாவடு துறை ஆதினத்தால் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 077 642 7135 எனும் தொலைபேசி இலக்கத் தோடு தொடர்புகொள்ள முடியும். (6)

# யாழில் போயா தினத்தில் மதுபானம் விற்ற நபர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கச்சேரி கிழக்கு பகுதியில் போயா தினத்தில் சட்ட விரோதமான முறையில் மதுபான விற்பனையில் ஈடுபட்ட ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டதுடன் மதுபானப் போத்தல்களில் 15 முழுப் போத்தலும், 165 கால் போத்தல்க ளும், 72 பியர் போத்தல்களும் இதன் போது மீட்கப்பட்டன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங் கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமை வாக மாவட்ட போதை ஒழிப்பு பிரிவும் இணைந்து நடத்திய சோத னையில் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணையின் பின் சந் தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 679





தன்னுடைய தேகத்தின் பலம் முழுவதையும் காலில் சேர்த்துக் கொண்டான். ஓங்கி ஒரு உதை விட்டான்! "வீல்" என்ற சத்தமிட்டுக் கொண்டு அந்த உருவம் பின்னால் தாவிச் சென்றது. சிறிது தூரம் பின்னால் சென்றதும் "டணார்" என்று ஒரு சத்தம். பள்ளிப்படைச் சுவரில் அது மோதிக்கொண்டது போலும்!

பின்னர் அங்கேயே அந்த உருவம் சிறிது நேரம் நின்றது. பள்ளிப்படைச் சுவரில் சாய்ந்து கொண்டு நிற்பதாகத் தோன்றியது. இருட்டில் விவரம் தெரியாவிட்டாலும் அந்த உருவம் தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பது போல் வந்தியத்தேவனுக்கு உணர்ச்சி ஏற்பட்டது.

கட்டுக்களை அவிழ்த்துக் கொள்வதற்கு மேலும் அவசரமாக அவன் முயன்றான். அந்த மந்திரவாதிப் பிசாசுகள் இவ்வளவு பலமாக முடிச்சுக்களைப் போட்டுவிட்டன! ஆகட்டும் மறு தடவை அந்த ரவிதாஸனைப் பார்க்கும் போது சொல்லிக் கொடுக்கலாம்! அந்த உருவம் இடம் விட்டுப் பெயர்ந்தது. பள்ளிப் படைக்குள்ளே போவது போலத் தோன்றியது. சிறிது நேரத்துக்கெல்லாம் பள்ளிப் படைக் கோவிலுக்குள் கூழாங் கற்கள் மோதுவது போன்ற 'டண்', 'டண்' சத்தம் சில முறை கேட்டது.

கோவில் வாசலில் வெளிச்சம். அதோ அந்த உருவம் கையில் ஒரு சுளுந்தைப் பிடித்துக் கொண்டு கோவிலுக்கு வெளியே வருகிறது. தன்னை நோக்கி வருகிறது. அது ஒரு காளாமுக வீர சைவனின் உருவம். நீண்ட தாடியும், சடைமுடியும், மண்டை ஒட்டு மாலையும் அணிந்த பயங்கரமான உருவம். வந்தியத்தேவன் அருகில் வந்து வெளிச்சத்தை தூக்கிப் பிடித்து அவனை உற்றுப் பார்த்துக் கொண்டு நின்றது.

### 37 ஆம் அத்தியாயம் வேஷம் வெளிப்பட்டது

பயங்கரத் தோற்றம் கொண்டிருந்த அந்தக் காளாமுக சைவரை அந்த நேரத்தில் அந்த இடத்தில் பார்க்கும் வந்தியத்தேவன் ஒரு கணம் திகிலடைந்தான். பிறகு அவனுக்கு இயற்கையான துணிச்சல் திகிலை விரட்டியடித்தது. "இவனை எங்கேயோ பார்த்திருக்கிறேனே? எங்கே?" என்று சிந்தித்தான். ஆம், ஆம் அரிச்சந்திர நதிக் கரையில் மரத்தடியில் படுத்திருந்த போது இரண்டு பேர் வந்து உற்றுப் பார்த்துவிட்டுப் போகவில்லையா? அவர்களில் ஒருவன் இவன்! அவ்வளவுதானா? ஒரு தடவை மட்டும் பார்த்த முகமா இது? அந்தக் கூரிய பார்வையுள்ள கண்களை வேறு எங்கேயும் பார்த்ததில்லையா?

இதற்குள் காளாமுக சைவன் அவனை உற்றுப் பார்த்துவிட்டு, "ஹா! ஹா! ஹா!" என்று சிரித்தான். அந்தக் குரல் அடிக்கடி கேட்ட குரல்போல் இருக்கிறதே?

"அட சே! நீ தானா? உனக்காகவா இந்த நள்ளிரவில் இவ்வளவு கஷ்டப்பட்டு வந்தேன்?" என்று காளாமுக சைவன் கூறியபோது, அவன் வேண்டுமென்று சிறிது குரலை மாற்றிக் கொண்டு பேசியதாகத் தோன்றியது.

"பின்னே, யாருக்காக வந்தாய்?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இளவரசரைத் தேடிக் கொண்டு வந்தேன்!" என்றான் காளாமுகன். "எந்த இளவரசரை?" உனக்கென்ன அதைப்பற்றி? நீ ஏன் கேட்கிறாய்? "நானும் ஒரு இளவரசன்தான் அதனால் தான் கேட்டேன்." "இளவரசனுடைய முக லட்சணத்தைப் பார்!"

"என் முகலட்சணத்துக்கு என்ன ஐயா குறைவு? உம்மைப் போல் தாடி மீசையும், சடைமுடியும், எலும்பு மாலையும் அணிந்தால் என் முகம் இலட்சணமாகி விடுமா?"

(தொடரும்)

## சிறுவர் அரங்கம்



### தென்றலும் சுழற்காற்றும்



மாமரம் ஒன்று சலசலவென்று சிலிர்த்து ஆடிக்கொண்டிருந்தது. அதன் கிளைகளிலே தங்க நிற மாம்பழங்கள் அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தன. ஓர் அணிற்பிள்ளையும் ஒரு கிளிப்பிள்ளையும் அந்த மாமரத்தை நெருங்கின.

அம்மா, மாமரத் தாயே! பசித்து வந்திருக்கிறோம் என்றது கிளிப்பிள்ளை.

"உங்களுக்காகத் தானே பழம் வைத்திருக்கிறேன். நன்றாகச் சாப்பிடுங்கள்" என்று கூறியது மாமரம். "மாவம்மா! இன்று, ஒரே ஆனந்தமாயிருப்பது போல் தெரிகிறது என்ன காரணம்' என்று விசாரித்தது அணிற்பிள்ளை.

பிள்ளைகளே தென்றல் மாமா வந்திருக்கின்றார். அவர் வந்திருப்பதே ஓர் இன்பம் தானே என்று கூறியது மாமரம்.

அணிற்பிள்ளையும் கிளிப்பிள்ளையும் வயிறு நிறையப் பழம் சாப்பிட்டுவிட்டுச் சென்றுவிட்டன. தென்றல் மாமாவுடன் நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டிருந்தது மாமரம்.

இரண்டு நாட்கள் கழித்து அணிற்பிள்ளையும் கிளிப்பிள்ளையும் மாமரத்தைத் தேடி வந்தன. "மாவம்மா! நேற்றெல்லாம் "ஓ"வென்று அலறிக் கொண்டிருந்தாயே ஏன்?" என்று கேட்டது அணிற்பிள்ளை.

"இதென்ன அநியாயம்! மாமரத்தாயே! உன் கிளைகளெல்லாம் ஏன் முறிந்து கிடக்கின்றன. ஐயோ! பழமெல்லாம் கீழே விழுந்து அழுகிக் கிடக்கின்றனவே ஏன்?" என்று பதறிப்போய்க் கேட்டது கிளிப்பிள்ளை.

"பிள்ளைகளே நேற்று சுழற்காற்று என்கிற முரடன் வந்தான். அவன் செய்த அட்டூழியம் தான் இது!" என்று கூறிக் கண்ணீர் விட்டது மாமரம்.

மாமரத்தின் துன்பத்தைக் காணப் பொறுக்காமல் கிளிப்பிள்ளையும், அணிற்பிள்ளையும் கண்ணீர்விட்டன. அவற்றிற்குப் பழம் கொடுக்க முடியாமல் போய் விட்டதே என்று மாமரம் வருந்தியது. பின்னர் அவையிரண்டும் தத்தம் இருப்பிடம் நோக்கிச் சென்றன.

கருத்துரை:- நல்லவர்கள் வரவால் இன்பம் ஏற்படும். தீயோர்கள் வரவால் துன்பமே உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. - *திருவள்ளுவர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நன்றியின் உன்னதத்தை எடுத்தியம்பும் தைப்பொங்கல்

இன்று தைப்பொங்கல். சூரியபகவானுக்கு நன்றி செலுத்துவதன் பொருட்டு தைப்பொங்கல் தமிழ் மக்களால் கொண்டாடப்படுகிறது.

வைகறையில் துயிலெழுந்து புதுப்பானை எடுத்து புத்தரிசியில் சர்க்கரைப் பொங்கல் செய்து, முக்கனிகளுடன் கருப்பஞ்சாறும் தேனும் பசும்பாலும் இனிய இளநீரும் வைத்து சூரியபகவானுக்குப் படைக்கின்ற இன்றைய தைப்பொங்கல் தமிழர்களின் உயர்ந்த பண்பாட்டை உலகெங்கும் எடுத்துக் காட்டுவதாகும்.

இதுஒருபுறமிருக்க, தைப்பொங்கல் என்பதை எவரும் வெறுமனே உச்சரித்துவிடலாகாது.

தைத்திங்கள் முதலாம் நாள் காலவோரையில் முக்கியமானது.

ஆம், மானிடர்களுக்கு ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள் என்பது கணிப்பு.

ஆக, எமக்கு இருபத்து நான்கு மணித்தியாலங்களில் 12 மணித்தியாலங்கள் பகல் பொழுதும் எஞ்சிய 12 மணித்தியாலம் இரவுப் பொழுதுமாக அமைகிறது.

அதாவது, ஒரு நாளில் அரைப்பொழுது பகல். எஞ்சிய அரைப்பொழுது இரவு.

இஃது நமக்கான கட்டமைப்பு. இதனை ஒழுங்குசீராகப்பின்பற்றுகின்ற பெரும் பொறுப்பு சூரியபகவானுடையதாகும்.

இதேவேளை ஒரு வருடத்தை ஒரு நாளாகக் கொண்டிருக்கக்கூடிய தேவர்களுக்கு எங்கள் கணிப்பில் ஆறு மாதம் பகல். ஆறு மாதம் இரவு.

தேவர்களின் பகல் பொழுதை உத்தராயண காலம் என்றும் இரவுப் பொழுதை தட்சணாய காலம் என்றும் வேதங்கள் வகுத்தன.

இங்குதான் நாம் ஓர் உண்மையைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதாவது தேவர்களுக்கு ஆறு மாதம் பகல். ஆறு மாதம் இரவு எனும் போது, தேவர்களின் பகல் பொழுதானது தைமாதம் முதலாம் திகதி தொடங்குகிறது.

அதாவது இன்று தேவலோகத்தில் பகலுக்கான விடியல். மாறாக, ஆடி மாதம் முதலாம் திகதி தேவர்களுக்கு இரவுப் பொழுது ஆரம்பமாகின்றது.

இங்குதான் தேவலோகத்தில் விடிகின்ற பகல் பொழுதின் முதல் நாளாகிய தை மாதம் முதலாம் திகதி; பூலோகத்தில் இருக்கக்கூடிய நாம், சூரியனுக்குப் பொங்கிப் படைத்து எங்கள் உயிர்வாழ்வுக்கு உதவிய சூரியபகவானுக்கு நன்றி செலுத்தி வணங்குகின்றோம்.

இதுதவிர, தை மாதம் முதலாம் திகதி தொடங்கிய ஆறு மாத காலத்தில் சூரியபகவான் கிழக்கு வானில் இருந்து வடக்குத் திசை சார்ந்து மேற்றிசை ஏகுவார்.

மாறாக, ஆடி மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகின்ற இராப்பொழுதின் ஆறு மாத காலத்தில் சூரியபகவான் கிழக்கில் உதித்து தென்திசை சார்ந்து மேற்றிசையை அடைவார்.

இவ்வாறான கால வகுப்பு என்பது நாம் வாழுகின்ற பூமியின் கண் இருக்கக்கூடிய வெப்ப, தட்ப சூழ்நிலைகளையும் அதற்கேற்றாற்போன்று நாம் உண்ண வேண்டிய உணவு ஆகாரங்களின் தன்மைகளையும் எடுத்தியம்புவதாகவும் அமைகிறது.

ஆக, தைப்பொங்கல் நடைபெறும் தைத்திரு நாளுக்கு எத்தனை பொருள் கொண்டாலும் நன்றி என்பதே அங்கு உன்னதமடைகிறது.

# சட்டத்தை முழுமையாக அமுலாக்கினால் க்ளீன் ஸ்ரீலங்கா திட்டம் வெற்றிபெறும்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினால் க்ளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டம் வெற்றி பெறும் எனச் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் க்ளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டம் வெற்றி பெற வேண்டுமாயின் ஒட்டுமொத்த மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஒரு வாரத்துக்கு மாத்திரம் வீதியைத் துப்பரவு செய்வதால் நாட்டைத் தூய்மைப்படுத்த முடியாது.

சட்டத்தை முறையாக அமுல்படுத்தினால் இலக்கை அடைய முடியும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் க்ளீன் ஸ்ரீலங்கா செயற்திட்டம் சிறந்தது.

அரசியல் நோக்கத்துக்கு இந்தத் திட்டத்தைச் செயற்படுத்தக் கூடாது.

நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் மக்கள் மத்தியிலிருந்து புதிய மாற்றங்கள் தோற்றம் பெற வேண்டும்.

சிங்கப்பூர் நாட்டில் க்ளீன் செயற்திட்டம் ஆரம்பமான போது அரசாங்கத்துக்கு அந்நாட்டு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள். (ம-7)

## பட்டிப்பொங்கலும் கோபவனியும்

பட்டிப் பொங்கல் விழாவும் கோபவனியும் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.கே.கே.எஸ் வீதி சத்திரத்து ஞான வைரவர் ஆலயத்தில் பசுக்கள் இடபங்கள் பாதுகாப்பு இணையத்தலைவர் ப.பாலசுப்பிரமணியம் (ஜே.பி) தலைமையில் இடம்பெறவுள்ளது.

கோபவனியானது கே.கே.எஸ் வீதி வைரவர் ஆலயத்தில் (சிக்னல் சந்தி) ஆரம்பித்து மின்சார நிலைய வீதி பெரிய கடை யாழ்.பேருந்து நிலைய மேற்கு வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாக ஆலயத்தை வந்தடையும். (6)

## 40 மில்லியன் பெறுமதியான போதைப் பொருட்களுடன் சந்தேக நபர் கைது

கொரதொட்ட, வெலிஹின்ன பகுதியில் சுமார் 4 கிலோ 500 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கைது செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் ஐஸ் போதைப்பொருளுக்கு மேலதிகமாக சுமார் 500 கிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரால் கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் பெறுமதி 40 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேல் மாகாணத் தெற்குப் பிரிவுக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கயங்க மாரப்பனவின் அறிவுறுத்தலின் பேரில் நடைபெற்று வருகின்றன. (ம-7)

## இலத்திரனியல் சிகரெட்டுடன் கட்டுநாயக்கவில் பெண் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் சுமார் 6 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இலத்திரனியல் சிகரெட்டுகளை கொண்டு வந்த பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வெளியே பொருட்களைக் கொண்டு செல்ல முயன்ற பெண்ணை விமான நிலையப் போதைப் பொருள் பணியகத்தின் அதிகாரிகள் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண் கொழும்பு, பிலியந்தலைப் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடையவர் எனவும் அவர் பயண முகவராக பணிபுரிவதாகவும் தெரியவந்துள்ளது.

அவர் கொண்டு வந்த இரண்டு பொதிகளில் 455 இலத்திரனியல் சிகரெட்டுகள் மட்டுமே இருந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபரான பெண், மேலதிக விசாரணைக்காக நேற்று கட்டுநாயக்க நாயக்க சுங்கத் தடுப்புப் பிரிவு அலுவலகத்தில் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)

## மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை (13) முற்பகல் வேளையில் நடைபெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறைப் பொலிஸ் பிரிவு சென்னக்கிராமப் பகுதியில் வீட்டுவேலை செய்துகொண்டிருந்த போது, மலையடிக்கிராமம் 03 பகுதியில் வசித்த (வயது60) நபரே இவ்வாறு மின்சாரம் தாக்கி மரணமடைந்துள்ளார்.

மரணமடைந்தவரின் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## கடத்தப்பட்ட மாணவி அம்பாறையில் மீட்பு

(அம்பாறை)

கம்பளை, கெலிஓயாப் பகுதியில் வானில் கடத்திச் செல்லப்பட்ட மாணவியைப் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

கடத்திச் செல்லப்பட்ட இந்த மாணவி அம்பாறைப் பேருந்து நிலையத்தில் இருந்த போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக் காலை கண்டிக்குப் புறப்படவிருந்த சொகுசு பேருந்தில் இருந்த போது கடத்திச் சென்றவரையும் குறித்த மாணவியையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு அம்பாறைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் இருவரும் தங்கியிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் மாணவியிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை மாணவி வைத்தியப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளார். (ம-7)

## புகையிரதம் மோதி பெண் உயிரிழப்பு

கொழும்பில் புகையிரதத்துடன் மோதி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை கொழும்பு வெள்ளவத்தைப் புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் களுத்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த புகையிரதத்தின் முன்னே பாய்ந்து அவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்ததாகச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் உயிரிழந்த பெண் தொடர்பிலான தகவல்கள் எவையும் இதுவரை வெளியாகவில்லை.

மேலும் பெண்ணின் உடல் வெள்ளவத்தைப் புகையிரத நிலையத்தில் விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி - I

11

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

- வட்டார மட்டத்தில் - 60%
- விகிதாசார அடிப்படையில்-40%

**2) உள்ளூராட்சி அதிகார சபை நிர்வாகப் பிரதேசத்தில் விகிதாசார முறையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?**

அனைத்து உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கும் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படவிருக்கும் உறுப்பினர் எண்ணிக்கை நூற்றுக்கு 60 வீதம் எனக் கருத்திற் கொண்டு, எஞ்சிய நூற்றுக்கு 40 வீதம் விகிதாசார முறைப்படி தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் எண்ணிக்கை எனக் கணிப்பிடப்படுகின்றது. இவ்விரண்டினதும் கூட்டுத்தொகை குறித்த உள்ளூர் அதிகார சபையின் உறுப்பினர் எண்ணிக்கையாகும்.

உதாரணம்-:

A என்னும் பிரதேச சபையை எடுத்துக்கொள்வோம். இப் பிரதேச சபையின் ஒரு உறுப்பினர் வட்டாரம் 14 எனவும் 2 உறுப்பினர் களைக் கொண்ட பன்மை வட்டாரம் 1 எனவும் எடுத்தால் வட்டாரங்களின் மொத்த எண்ணிக்கை 15 ஆகும். ஒருமை வட்டாரத்திற்கான அபேட்சகர்கள் 14 ஆகவும் பன்மை வட்டாரத்திற்கான அபேட்சகர்கள் 2 ஆகவும் இருக்கும். எனவே மொத்த அபேட்சகர்கள் எண்ணிக்கை 16 ஆகும். இதன் பிரகாரம் வட்டார அடிப்படையில் நூற்றுக்கு 60 வீதம் 16 ஆகும். இனி விகிதாசார அடிப்படையில் நூற்றுக்கு 40 வீதத்தைக் கணிப்பிட வேண்டும்.

**வட்டார அடிப்படையில் நூற்றுக்கு 60 வீதக் கணிப்பீடு பின்வருமாறு கணிக்கிடப்படுகிறது.**

பிரதேச சபை A யின் முழு வட்டாரத்திற்கும் வட்டார அடிப்படையிலான அபேட்சகர்களின் எண்ணிக்கை 16 இன் 40/60 விகிதமாகும்.

அதன்படி பிரதேச சபை A யின் 40 வீத அபேட்சகர்களின் எண்ணிக்கை 16X (40/60) = 10.66 ஆகும். மேலும் தசம தானத்தைக் கருத்திற்கொள்ளாது முழு எண்ணிக்கை கணக்கிடப்பட வேண்டும். அதன் பிரகாரம் விகிதாசார அடிப்படையிலான நூற்றுக்கு 40% அபேட்சகர்களின் எண்ணிக்கை 10 ஆகும். இதன் பிரகாரம் A என்னும் பிரதேச சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை (16+10) = 26 ஆகும்.

நாடு முழுவதும் உள்ள உள்ளூராட்சி சபைகளின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 2 இல் காட்டியது போல் 5092 ஆகும். இந்த 5092 உறுப்பினர்களும் 25 மாவட்டங்களுக்கு இடையே பிரித்து வழுங்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைகளின் வட்டார உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையின் 60 வீதம் ஆகும். மிகுதி 40 வீதம் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படுவார்கள். இலங்கையிலுள்ள மொத்த 341 உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு மாவட்ட ரீதியில் அமைந்துள்ளது. (எண்ணிக்கை அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)

மாவட்ட ரீதியில் உளளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அட்டவணை -6 காட்டுகிறது.

அட்டவணை -6 மாவட்ட ரீதியில் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாவட்டம் | A | B | மாவட்டம் | A | B |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 329 | 543 | மன்னார் | 54 | 88 |
| கம்பஹா | 417 | 688 | மட்டக்களப்பு | 146 | 238 |
| களுத்துறை | 277 | 457 | அம்பாறை | 231 | 378 |
| கண்டி | 377 | 620 | திருகோணமலை | 136 | 220 |
| மாத்தளை | 168 | 273 | அனுராதபுரம் | 228 | 372 |
| நுவரெலியா | 186 | 306 | பொலன்னறுவை | 102 | 166 |
| காலி | 272 | 447 | குருநாகல் | 378 | 620 |
| மாத்தறை | 224 | 365 | புத்தளம் | 186 | 306 |
| அம்பாந்தோட்டை | 160 | 262 | பதுளை | 239 | 391 |
| யாழ்ப்பாணம் | 243 | 402 | மொனராகலை | 121 | 198 |
| கிளிநொச்சி | 40 | 66 | இரத்தினபுரி | 258 | 423 |
| வவுனியா | 63 | 103 | கேகாலை | 216 | 357 |
| முல்லைத்தீவு | 41 | 67 | மொத்தம் | 5092 | 8356 |

A- வட்டார உறுப்பினர்கள் , B- மொத்த உறுப்பினர்கள்

வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கை எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது? அனைத்து அரசியற் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் இரண்டு படிவங்களில் தமது வேட்புமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வட்டாரங்களுக்கான வேட்பு மனுக்கள்**

ஒருமை வட்டாரங்களினதும் மற்றும் பன்மை வட்டாரங்களினதும் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு, உள்ளூராட்சி அதிகார சபைக்கு வட்டார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையிலான அபேட்சகர்களின் பெயர்கள் குறித்த வேட்புமனுவில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

மேலே உதாரணத்தில் கணித்துக் குறிப்பிட்டவாறு நூற்றுக்கு 40 வீதமான எண்ணிக்கையைக் கணித்து அவ்வெண்ணிக்கையுடன் மேலதிகமாக 3 ஐச் சேர்த்து வரும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை கொண்ட அபேட்சகர்களின் பெயர்கள் குறித்த வேட்பு மனுவில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்

உதாரணம்:-

A என்னும் பிரதேச சபைக்கு விகிதாசார அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர் எண்ணிக்கை 10 ஆக இருந்தால் குறித்த வேட்புமனுவில் 13 (10+3=13) அபேட்சகர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்

வேட்புமனுப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கை எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது?

உதாரணமாக கொழும்பு மாநகரசபையை எடுத்துக்கொண்டோமானால் கொழும்பு மாநகரசபைக்கு வட்டாரத்தின் மூலம் 66 உறுப்பினர்களும் விகிதாசாரம் மூலம் 44 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் வட்டாரத்திற்கு உரிய வேட்புமனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கையானது, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 10 வீதமாகும். எனவே வட்டார முறைமூலம் 66 பேர் தெரிவு செய்யப்படவுள்ள நிலையில் அதில் 11 பேர் கட்டாயம் பெண் வேட்பாளர்களாக களமிறக்கப்பட வேண்டும்.

அதேபோன்று விகிதாசார முறைமையில் களமிறக்கப்படும் வேட்பாளர்களில் 50 வீதமானவர்கள் பெண்களாக இருக்கவேண்டும். அதாவது கொழும்பு மாநகர சபைக்கு விகிதாசாரம் மூலம் 47 (44+3மேலதிக வேட்பாளர்கள்= 47) வேட்பாளர்கள் களமிறக்க வேண்டிய நிலையில் அதில் 23 பேர் பெண்களாக இருக்கவேண்டியது சட்டமாகும்.

அப்படியாயின் மொத்தமாக கொழும்பு மாநகரசபைக்கு 66+47 என்றவகையில் 113 வேட்பாளர்கள் களமிறக்கப்படவேண்டியுள்ள நிலையில் அதில் 34 பேர் பெண்களாக இருக்கவேண்டும் என்பது சட்டம். இந்த விகிதம் மாறியமைந்தால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டு விடும்.

அனைத்து அரசியற் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் மேற்குறிப்பிட்ட வேட்புமனுப் படிவங்கள் இரண்டிலும் குறித்த பெண் அபேட்சகர்களின் பெயர்களை உள்ளடக்குதல் வேண்டும்.

வட்டாரத்திற்கு உரிய வேட்பு மனுவில் உள்ளடக்கப்பட வேண்டிய பெண் அபேட்சகர்களின் எண்ணிக்கையானது, மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 10 வீதமாகும்.

**தேர்தல் முடிவில் பெண் உறுப்பினர்களைத் தெரிவுசெய்தல்**

- தேர்தலில் கிடைத்த மொத்த செல்லுபடியான வாக்குகளில் 20% விடவும் குறைந்த வாக்குகளைப் பெற்ற மற்றும் மூன்று அல்லது அதற்கு குறைந்தளவு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்ட கட்சி அல்லது சுயேட்சைக் குழுக்கள் பெற்றுக்கொண்ட வாக்குகள் மொத்தச் செல்லுபடியான வாக்குகளில் கழிக்கப்படும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக்கிணற்...

ருப்புப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சுதந்திரபுரம் கிராமத்தினைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் கடந்த 11.01.2025 அன்று காணாமல் போயுள்ளார். பின்னர் அவரைத் தேடும் பணியில் உறவினர்கள் ஈடுபட்ட நிலையிலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் நேற்று குறித்த இளைஞனது வீட்டுக் கிணற்றில் சடலம் மிதந்துள்ளது.

குறித்த இளைஞனின் மரணம் தற்கொலையா? கொலையா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,299)

## ரயில் மோதி...

றுள்ளது.

யாழில் இருந்து புறப்பட்ட ரயிலுடன் பாதுகாப்பற்றரயில்பாதையில்மோதுண்டே மேற்படி இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இதில் அல்லாரைப் பகுதியைச் சேர்ந்த 18 வயதான இளைஞன் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## அநுர அரசு...

ரத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமான சகல ஒத்துழைப்புக்களையும் வழங்குவதற்கு பிரிட்டன் தயாராக இருப்பதாக இலங்கைக்கான அந்நாட்டு உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மைப்பலத்தைப் பெற்றிருப்பதாகவும், அவர்களுக்கு உதவுவதற்கு சர்வதேச சமூகம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

## பருத்தித்துறை...

திணைக்களப் பொறுப்பதிகாரி ரசிகரன் தலைமையிலான குழுவினரே பருத்தித்துறை-கரணவாய்ப் பகுதிகளில் மூன்று வெவ்வேறு இடங்களில் மேற்படி முற்றுகை நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது சட்டவிரோதமாக விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த சாராயம் மற்றும் பியர் ஆகியன மீட்கப்பட்டதுடன் சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30)

## சீனா பயண...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, சீனாவிற்கான நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்றிரவு கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார்.

அவருடன் அமைச்சர்களான விஜித ஹேரத் மற்றும் பிமல் ரத்நாயக்க ஆகியோரும் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பயணத்திற்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் அழைப்பு விடுத்திருந்தார். சீனப் பயணத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி இம்மாதம் 17 ஆம் திகதி இலங்கை திரும்பவுள்ளார். (ம-7)

## தமிழ்த்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு விடயம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு நிலைப்பாடுகளுடன் இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் பிரதிநிதிகளான அவர்கள் அனைவரும் ஓரணியில் இணைந்து தீர்வு விடயம் தொடர்பில் பொதுவான நிலைப்பாட்டைத் தெரிவித்தால் அது தொடர்பில் நாம் ஆராய்ந்து தீர்க்கமான முடிவை அறிவிப்போம்.

அதைவிடுத்து ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் தீர்வு தொடர்பில் தெரிவிக்கும் வெவ்வேறு விதமான கருத்துக்களுக்கு எம்மால் பதில் கூற முடியாது.

அண்மையில் சிறீதரன் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்து தீர்வு விடயம் தொடர்பில் தங்கள் நிலைப்பாட்டைத் தெரிவித்தார்கள். இதை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால், சில தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்காமல் வாய்க்கு வந்த மாதிரி தீர்வு விடயம் தொடர்பில் [illegible] கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள்.

முதலில் தமிழ்க் கட்சிகளுக்கிடையில் ஒற்றுமை வேண்டும். தீர்வு விடயம் தொடர்பில் அவர்கள் பொதுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்.

வெளியில் இருந்துகொண்டு அரசை விமர்சிப்பதால் எந்தப் பயனும் இல்லை. புதிய அரசமைப்பில் அரசியல் தீர்வு உறுதி. இது எமது தேர்தல் கால வாக்குறுதி. இதை நிறைவேற்றியே தீருவோம் என்றார். (ம-7)

## திருத்தாதிருக்க...

திஸாநாயக்க இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி 1, 2024 முதல், பெற்றோல் லீற்றருக்கு ஜனவரி 01, 2024 முதல் பெற்றோலுக்கு 72 ரூபாய் ஓட்டோ டீசல் லீற்றருக்கு 50 ரூபாய் மற்றும் சூப்பர் டீசலுக்கு ரூ.57 வரி விதிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 11ஆம் திகதி முதல் வரிகள் அதே முறையில் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மாகா...

பொலிஸ் நிலையங்களுக்கு மேலதிகமாக, மாகாண மட்டத்திலான குற்றவியல் விசாரணைப் பிரிவுகளை நிறுவுவது குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

இதன் முதற்கட்டமாக ஏற்கெனவே தென் மாகாணத்தில் குற்றவியல் விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இவ்வாறு குற்றவியல் விசாரணைப் பிரிவுகள் மாகாண ரீதியில் நிறுவப்படுவதற்கு காரணம், விசாரணைகளை முன்னெடுக்கப்படுவதை முறையாக விரைவுபடுத்துவதே நோக்கமாகும்.

தற்போதைய நிலையில் முக்கிய சில விசாரணைகள் பொலிஸ்மா அதிபரின் நேரடி மேற்பார்வையின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்றார். (ம-7)

## இலாபமீட்டும்...

தீர்ப்பதற்கும் சரிசெய்வதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்படும் அனைத்து ஊழியர்களையும் ஊக்குவித்து பாதுகாப்பேன் என்று சுகாதார அமைச்சர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மருத்துவத் துறை இன்று உலகில் அதிக இலாபம் ஈட்டும் தொழிலாகவும், ஒரு மோசடியாகவும் மாறிவிட்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 5715
U 9 0 5 0 0 5
அத சம்பத U 5 0 0 5
சீட்டிழுப்பு இலக்கம் 290
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.01.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1745
Y 20 31 48 63 Y
Double Chance 94205

மெகா பவர்
திகதி 13/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2063
D 21 24 28 30 77

லக்கி 7 VIP
திகதி 2025.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 541
N 6 7 3 1 7 0 N

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3957
சீட்டிழுப்பு திகதி 13.01.2025
X 19 29 48 75
X

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.01.13
சீட்டிழுப்பு இலக்கம் 1024
தனுசு 03 05 09 16 தனுசு
16391 28

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பென் சம்பத
13.01.2025 வெற்றி வாரம் 423
G 0 7 3 1 9 8
89952
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,058,781.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2689
சீட்டிழுப்பு திகதி 2025.01.13 தினம் திங்கட்கிழமை
02 07 08 13 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,681,396.00

சனிதா
திகதி 13.01.2025 வெற்றி வாரம் 4850
27 30 33 35 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,755,299.60
84920

ஜயோதா Jayoda
திகதி 2025.01.13 வெற்றி வாரம் 2094
11 14 25 61 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 27,279,043.20

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4401
சீட்டிழுப்பு திகதி 13.01.2025 தினம் திங்கட்கிழமை
13 24 27 54
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,090,458.80
115995

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 21 18 27 42 63
1865
13.01.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.561,751,079.20

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2515
சீட்டிழுப்பு திகதி 2025.01.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,440,470.40
08 13 56 72 Z
412188

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**V2 VISA SERVICES கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C2033)



## A/L PHYSICS

2024, 2025, 2026 Batch
இற்கான தனிப்பட்ட, குழு வகுப்புக்களும் மற்றும் மீட்டல் வகுப்புக்களிற்கும்

**077 600 4896**

YMCA, தம்பசிட்டி, பருத்தித்துறை.
SCK, 2ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(2065)



## விற்பனைக்கு

நல்ல நிலையில்உள்ள Scooty Streak மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

**075 887 5036**
(C-2036)


## புளிவிலைஉயர்வு

உள்ளூர் சந்தையில் புளிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஒரு கிலோகிராம் புளியின் சில்லறை விற்பனை விலை ரூ.2,000 ஆக உயர்ந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர். முன்பு ஒரு கிலோ புளியின் சில்லறை விலை ரூ. 350 முதல் ரூ. 400 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால், தற்போது விலை கணிசமாக அதிகரித்துள்ளது. (ம-7)


## HAPPY SUPERMARKET DELIVERY

உங்கள் Happy Supermarket Home delivery வடமராட்சி வாடிக்கையாளர்களிற்காக செவ்வாய்க்கிழமைகளில் 6000/= இற்கு மேற்பட்ட கொள்வனவுகளிற்கு திங்கட்கிழமை 5 pm இற்கு முன் Whatsapp மூலமாக ஓடர்களை பதியவும்.

**Happy Supermarket - Urumpirai**
**076 800 6500**
(544)



## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு யாழ். நகரப் பகுதியில் தங்கி நின்று பணிபுரிய பணிப்பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(1024)

**தொடர்பு:077 986 3097**



புதியபிரிவுகள் ஆரம்பம்
18/01/2025

தொழிற்துறைக்கணக்காளர் ஆவதற்கு
**aat [ Sri Lanka]**
[AA1, AA2, AA3]
Qualification:- G.C.E. O/L 6 Passes
(Medium – Tamil & English)

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business level I,II
Qualification:-G.C.E. A/L 3 Passes
(Medium – Tamil &English)

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
DBF & HDBF
Quallification:- G.C.E. A/L 3 Passes
( Medium – Tamil & English)

G.C.E A/L பெறுபேற்றினை எதிர்பார்திருப்பவர்களும் கற்கலாம்

**Certificate Course in English**

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.
0212223382 / 0774405917
(C-2030)



## இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

யாழ். நகரில் டயர் மீள் நிரப்பும் நிறுவனமான நோர்தேண் இன்டஸ்ரீஸ், வாடிக்கையாளர்களுக்கு தமது தரமான சேவையை வழங்கி வருகிறது. உங்கள் இடத்திற்கே வந்து டயர்களைப் பெற்று மீள் நிரப்பித் தருவதோடு, வாடிக்கையாளர்கள் தாம் விரும்பும் அச்சுக்களை தெரிவு செய்யவும், துரித சேவையை வழங்கவும் காத்திருக்கிறது.
(2020)

நோர்தேண் இன்டஸ்ரீஸ்
69, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 1735
070 714 8691



அறுசுவை உணவுகளிற்கு சுத்தமான

## றோயல் நெய்

Royal

உங்கள் வாழ்வின் இனிய தருணங்களை தரமான றோயல் நெய் கொண்டு தயாரித்த அறுசுவை உணவுகளுடன் கொண்டாடி மகிழுங்கள்

ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.



குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும் சுப்பர்மார்க் கட்களிலும் பலசரக்கு கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்

எங்கள் அன்பான வாடிக்கையாளர்களுக்கு உளம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

Marketed By :-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

Packed By:-
Royal Industries®
(C-2031)



## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
• Visit visa
• Student visa
• Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்
தொடர்புகளுக்கு :
**075 033 6759**
(531)



# விற்பனைக்கு

- யாழ். கொட்டடி சந்திக்கு அண்மையில் 10 பரப்புக் காணியும்
- யாழ். K.K.S வீதியில் பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 03 பரப்புக் காணியும்
- யாழ். இராசாவின் தோட்ட வீதியில் 5 பரப்பு, 6 ½ பரப்பு, 4 பரப்புக் காணியும்
- யாழ். K.K.S வீதியில் தெருவடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக தனிக்கடை 3 மாடியுடன் கூடியது
- யாழ். மின்சார நிலைய வீதியில் பேருந்து தரிப்பிடத்திற்கு பின்புறமாக இரண்டு கடைகளும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் 16 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்
- யாழ். பலாலி வீதியில் S.V.M எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக 5 பரப்புக் காணியும்
- யாழ். வைத்தியசாலை வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும்
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அருகில் 30 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட மாடிக் கடையும்
- யாழ். வெலிங்டன் சந்திக்கு அண்மையில் 1 ½ பரப்பில் அமைந்த 3 மாடிக் கடையும்
- யாழ். மின்சார நிலைய வீதி முதலாம் ஒழுங்கையில் 1 ½ பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

(C-2035)

தொடர்புகளுக்கு:
கனகசபை தர்மகுலசிங்கம்
இல.183, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:
077 723 2535

கனகசபை தர்மகுலசிங்கம்
இல.185, காலி வீதி,
வெள்ளவத்தை



**Tharany SUPERMARKET**

எமது மாணவச் செல்வங்களுக்காக தாரணி சூப்பர்மார்க்கெட்டின் அதிரடி சலுகை

5 கட்டு கொப்பிகள் 2 வாங்கினால்,
அதே 5 கட்டு கொப்பிகள் 2 இலவசம்
Free



இச்சலுகை
**2025/01/15**
அன்று மட்டுமே..

No 758, KKS Road, Jaffna, Sri Lanka
077 1997 206
நிபந்தனைக்குட்பட்டது
(C-2034)



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் ஸ்ரீ முருகனின் தைத்திருநாள் வாழ்த்துக்கள்.

# ஸ்ரீ முருகன்
# SRI MURUGAN
## Communication Agency post office

WESTERN UNION MONEY TRANSFER · DHL · Ria · Dialog · aramex · MMBL Money Master · MoneyGram · Enriching Your Life

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக சேவைகள் இவை அனைத்தையும் பாதுகாப்பு, நம்பகத்தன்மை ஒரே கூரையின் கீழ் நாடுங்கள்.
(C-2029)

No.303, K.K.S Road,
Jaffna, Srilanka
Tel: 0094 21 222 2690 / 5392
Fax: 0094 21 222 3214
Email: Srimurugan09@gmail.com, srimurugan303@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினால் இல.171, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.